தமிழ்நாடு அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
வட்டாட்சியர் அலுவலகம், திருப்பெரும்புதூர்
காஞ்சிபுரம் மாவட்டம்

கூடுதல் அறிவிக்கை எண்.2200/2025 /அ2 நாள். .10.2025

அரசு கடித எண்.(MS)No.636/ வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை Ser.8(1)/2025 நாள்.18.09.2025-ன்படி கிராம உதவியாளர் பணி நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்வது குறித்து வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படி காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட கடந்த 08.07.2025 அன்று வழங்கப்பட்ட பத்திரிக்கை விளம்பரத்தின் பேரிலான திருத்தல் விளம்பரம் கீழ்க்கண்டவாறு வெளியிடப்படுகிறது. இத்திருத்தல் விளம்பரத்தின் அடிப்படையில் மேற்படி பணிக்கு விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட கிராம உதவியாளர் பணிக்காக ஏற்கனவே கடந்த 08.07.2025 நாளிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பம் செய்த நபர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை. மேற்படி நபர்கள் ஏற்கனவே அளித்த விண்ணப்பங்கள் மீண்டும் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

அ) விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் : 25.10.2025 மாலை 5.45 மணிக்குள்

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் – ரூ.11,100 – 35,100/- |
| காலிப் பணியிடத்தின் எண்ணிக்கை | 08 |
| வட்டத்தின்பெயர் : | திருப்பெரும்புதூர் |

| வ. எ.ண் | நிரப்பப்படும் கிராமத்தின் பெயர் | இனசுழற்சிவிவரம் | | பொது/ ஆண்/ பெண் | விதவை/முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுதிறனாளி |
|---|---|---|---|---|---|
| 1 | ஓட்டங்கரணை | 77 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பொது | அவசர காலத்தில் பிராந்திய படை மற்றும் துணை விமானப்படை மற்றும் துணை விமானப்படையில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள்) |
| 2 | சேந்தமங்கலம் | 78 | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம் | பொது | |
| 3 | இராமனுஜபுரம் | 79 | பொதுப்பிரிவினர் | பொது | |
| 4 | ஆரனேரி | 80 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட | பொது | பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட |

Scanned with OKEN Scanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | முஸ்லிம்கள் தவிர) | | மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவன பணியாளர்கள் |
| 5 | கிளாய் | 81 | பொதுப்பிரிவினர் | பெண் | PSTM (Person studied in Tamil Medium) தமிழ்மொழி வாயிலாக கல்வி பயின்றவர். |
| 6 | மேட்டுப்பாளையம் | 82 | ஆதிதிராவிடர் | பொது | |
| 7 | இருங்குளம் | 83 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பொது | காது கேளாதோர் |
| 8 | நெமிலி அ | 84 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) | பெண் | |

| | |
|---|---|
| **கல்வித்தகுதி** | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC- Secondary School Leaving Certificate Examination) **தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.** (குறிப்பு - SSLC- (Secondary School Leaving Certificate Examination) **மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்) (குறைந்தபட்ச கல்வித்தகுதி - பத்தாம் வகுப்பு தோல்வி)** |
| **இதர தகுதிகள்** | 1.விண்ணப்பதாரர் திருப்பெரும்புதூர் வட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2.தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.விண்ணப்பதாரர்கள் திருப்பெரும்புதூர் வட்டத்தை சேர்ந்தவர்களாகவும் அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| **வயது வரம்பு** | குறைந்த பட்ச வயது - 21 - (அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிக பட்ச வயது - 32 வயது - பொதுப்பிரிவினர்கள் (OC/GT)<br>-39 வயது பிப / மி.பி.ப.வ / சீ.ம (BC/MBC/DNC)<br>- 42 வயது பட்டியலினத்தவர் / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) (SC / ST / Destitute Widows of all Castes)<br>**முன்னாள் இராணுவத்தினருக்கு**<br>50 வயது - இதர வகுப்பினருக்கு<br>55 வயது - பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பட்டியலினத்தவர்/பழங்குடியினர். (அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்.13.09.2021-ன் படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br>**மாற்றுத்திறனாளிகளுக்கு**<br>அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். |
| **விண்ணப்பிக்கும் முறை** | விண்ணப்ப படிவம், தேர்வு முறை குறித்த இதர விவரங்களை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதள முகவரி https://Kancheepuram.nic.in/notice_category/recruitment/ மற்றும் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். விண்ணப்பத்தினை மேற்காணும் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து, |

Scanned with OKEN Scanner

| | |
|---|---|
| | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவண இணைப்புகளுடன், 25.10.2025 மாலை 5.45 மணிக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.<br><br>முகவரி<br>வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருப்பெரும்புதூர் வட்டம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் |

வட்டாட்சியர்,
திருப்பெரும்புதூர்

Scanned with OKEN Scanner